மண்முனைப்பற்று பிரதேச சபை-2013

---------------------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

-------------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 ஏப்ரல் 10 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்.

--------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை பற்று பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்.

-------------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்.

---------------------------------------------------------------------------------------------------------

உள்ளுராட்சி மாகாணசபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்.

---------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்துக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா.327,418இற்கு கொள்வனவு செய்யப்பட்ட நூலகபுத்தகங்கள் மீண்டுவரும் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) நான்கு பொது நூலகங்களில் ரூபா.89,097 பெறுமதியான 1,781 புத்தகங்கள் 1996ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரைக்கும் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த மெய்மையாய்வுச் சபைகளால் இருப்புக்களிலிருந்து நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவை ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்படாமல் உள்ளதனால் நிதிக்கூற்றில் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் காரணமாக ரூபா.165,500 பெறுமதியான தளபாடங்கள் இழக்கப்பட்டிருந்த போதிலும், அவை பதிவழிக்கப்படாமல் உள்ளதனால் நிதிக்கூற்றில் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) நடைமுறைக் கையிருப்புக்களில், ரூபா.17,184 கூட்டுமொத்தப் பொறுமதியான பொதுக்களஞ்சியப் பொருட்கள் மற்றும் மேற்பார்வையாளர் வெளிக்களப் பொருட்கள் 2006 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்த முடியாதவையாக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

1.3.3 செலுத்தவேண்டிய கணக்கு

---------------------------------------------

சபையினால், ஒய்வூதியத்திட்டத்திற்கான பங்களிப்பு பணத்தை மாதாந்தம் செலுத்துவதற்கு 1995 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படாததால் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா.975,592 பங்களிப்பு பணத்தை செலுத்தவேண்டி உள்ளது.

1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை.

---

நிதிக்கூற்றுக்களுலுள்ள பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்குவிடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள். |
|---|---|---|
| | ரூபா. | |
| காணிகள் கட்டிடங்கள் | 28,175,374 | காணி உறுதிப்பத்திரம் |
| பொறித்தொகுதியும் இயந்திரங்களும் | 363,555 | நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 2,553,674 | நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| மோட்டார் வாகனம் | 28,300 | நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| நூல் நிலைய புத்தகங்கள் | 914,423 | |

1.3.5 சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

---

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் Iஇன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை நான்கு உத்தியோகத்தர்களுக்கு |

|  |  |
| --- | --- |
|  | நிர்வாக ரீதியாக் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் Xஇன் பிரிவு 191 | மீளாய்வாண்டின் மூன்று சபைக் கூட்டங்கள் நடைபெற்றிருந்த போதிலும், அக்கூட்ட அறிக்கைகளின் உறுதிப்படுத்திய பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதிமீளாய்வு.

-------------------

2.1 நிதி விளைவுகள்.

----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.4,632,844 ஆகும். இதற்கெதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானங்களிலும் கூடியசெலவினம் ரூபா.1,462,933 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா. 6,095,777 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்.

-----------------------------------

2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்.

----------------------------------------------------------

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ள படியான வருமானம் | வேறுபாடு |
| --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகளும் வரிகளும் | 1,530,000 | 1,224,000 | 306,000 |
| வாடகை | 6,058,000 | 3,672,815 | (2,385,185) |
| உரிமைக்கட்டணம் | 590,000 | 575,895 | (14,105) |
| சேவைகளுக்கானகட்டணம் | 1,450,000 | 1,272,368 | (177,632) |
| தண்டப்பணம் | 2,116,000 | 1,643,943 | (472,057) |
| ஏனையவருமானங்கள் | 3,210,000 | 5,747,231 | 2,537,231 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 05 மோட்டார் வாகனங்களின் உரிமையை சபையின் பெயரில் மாற்றம் செய்வதற்கு மூன்று தொடக்கம் ஐந்து ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 ஆம் ஆண்டு பிரதேச சபைகள் உருவாகுவதற்கு முன்னர் பட்டினாட்சி மன்றமாக செயற்பட்ட காலத்தில் இலங்கை மின்சார சபை சார்பாக பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. அவை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் பொது மக்களுக்கு விநியோகித்த மின்சாரத்திற்கான ரூபா.781,370 தொகையான மின்கட்டண நிலுவையை அறவிடுவதற்கு 1993 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் இலங்கை மின்சார சபைக்கு செலுத்தவேண்டிய ரூபா.1,958,631 தொகையான மின்கட்டண நிலுவையை செலுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்.

---------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ள படியான செலவினத்திற்கும் இடையில் 3% தொடக்கம் 48% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும்கட்டுப்பாட்டுவிடயங்கள் தொடர்பாகவிசேடகவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக்கட்டுப்பாடு

(இ) வருமானமுகாமைத்துவம்

(ஈ) நிலையானசொத்துக் கட்டுப்பாடு

(உ) பதவியினர் கடன் அறவீடு

(ஊ) இருப்புக் கட்டுப்பாடு